# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## 1993, மார்ச் 17, புதன்கிழமை

## பங்குனி 4, ஆங்கிரச—திருவள்ளுவர் ஆண்டு—2024.

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''நோய்எல்லாம் நோய்செய்தார் மேலவாம் நோய்செய்யார்
நோயின்மை வேண்டு பவர்''.

எல்லாக் கேடுகளும் கேடு செய்தவரையே சென்று சேரும். எனவே, கேடின்றி வாழ விரும்புவோர் பிறர்க்குக் கேடு செய்ய நினையார்.

### 1. வினாக்கள்-விடைகள்.

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள். வினா எண். 101, திரு. எ. தெய்வநாயகம், இருக்கையில் இல்லை. திரு. பி.ஆர்.எஸ். வெங்கடேசன், இருக்கையில் இல்லை.

வினா எண். 102, டாக்டர் மு. சீனியம்மாள், மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர்.

102—

### அவினாசியில் குற்றவியல் நீதிமன்றம் நிறுவுதல்

*10459—டாக்டர் மு. சீனியம்மாள் :
மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

அவினாசியில் ஜூடிசியல் கோர்ட் நிறுவ அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி சட்ட அமைச்சர் பேரவைத் தலைவர் அவர்களே,
அவினாசியில் கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் ஜூடிசியல் கோர்ட் திறக்கப்பெற்றுவிட்டது.

டாக்டர் மு. சீனியம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவினாசித் தொகுதியினுடைய மக்கள் பல வருடங்களாக இந்தக் குற்றவியல் நீதிமன்றம் அவினாசியில் அமைக்கப் படவேண்டும் என்று பலமுறை கோரிக்கை விடுத்தும், அவர்களின் கோரிக்கை இதற்குமுன் நிறைவேற்றப்படவில்லை. இன்றைக்கு தமிழகத்தின் எந்த எதிர்ப்புக்கும் அஞ்சாத சிங்கம், இரும்புத் தலைவி, எங்கள் இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் முதல்வராய் பொறுப்பேற்ற பிறகு இந்தக் குறுகிய காலத்திற்குள், போன பட்ஜெட் கூட்டத் தொடரில் இந்தக் குற்றவியல் நீதிமன்றம் விரைவில் அவினாசியில் அமைக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை வைத்தோம். புயல் வேகத்தில் அந்த நீதிமன்றம் இந்த பட்ஜெட் கூட்டத் தொடர் வரும் முன்பே அவினாசியில் அமைக்கப்பட்டுவிட்டது. அதற்காக ''மலை போல் வரும் சோதனைகள் யாவும் பனிபோல் நீங்கிவிடும், நம்மை வாழ விடாதவர் வந்து நம் வாசலில் வணங்கிட வைத்து விடும்'' என்பதற்கு இலக்கணமாய் (மேசையைத் தட்டும் ஒலி) நல்லாட்சி புரிந்துகொண்டு இருக்கிற, மாண்புமிகு தமிழகத்தின் தன்னிகரில்லாத முதல்வர், தமிழக மக்களின் தங்கம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் மலர் பாதங்களில், அவினாசி தொகுதி மக்களுடைய நிரந்தர அன்பினையும், நன்றியினையும் காணிக்கையாக்கி, அதை அமுல்படுத்திய அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி கேட்க வேண்டும்.

வினா எண். 103, திருமதி. கே. மரியம் உல் ஆசியா, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

103—

பத்திரப்பதிவு அலுவலகங்களிலுள்ள நில மதிப்பு பற்றிய புத்தகம்.

*10905 திருமதி. கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பத்திரப்பதிவு அலுவலகங்களில் விவசாயிகளின் பூமி மதிப்பு பற்றிய புத்தகம் (கைடுலைன் வேல்யூ புக்) விவசாயிகள் கேட்கும் போது காட்ட அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம்.